ஏற்படுத்த அனுமதிக்கவேண்டும் என்ற கொள்கையை நம்முடைய மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. ஆகவே, அரசாங்கத்தின் சார்பிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். அனுமதி கொடுத்துவிட்டு, இப்பொழுது மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது. இதுதான் தொழில் கொள்கையிலே நாம் படுகின்ற சிரமம்.

திரு. அ. தேவேந்திரன் : தொழில் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மதுரை மாவட்டத்தில் இப்படிப்பட்ட தொழிற்சாலை துவங்குவதை விட்டுவிட்டு, பின்தங்கிய மாவட்டமான தஞ்சை மாவட்டத்தில் அமைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரைக்கே ஆபத்து என்றேன்.

Petro-Chemical Industry at Tuticorin

* 519 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Petro-chemical Complex at Tuticorin; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த பெட்ரோ-கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் மூலம் கிடைக்கின்ற பிளாஸ்டிக் பொருட்கள் இனிமேல் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. இரும்புக்குப் பதிலாக இதையே பல இடங்களில் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருப்பதால், இத்தொழிலை அபிவிருத்தி செய்ய சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூலப்பொருட்கள் குறைவாக இருப்பதால் பெட்ரோ கெமிக்சல் தொழிற்சாலைகளை அதிகமாகத் துவக்குவதற்கு மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவித்திருக்கிறது. மெட்ராஸ் ரீபைனரீஸை ஒட்டி, நாப்தாவிலிருந்து கிராக்கர் போட்டு, அதன்மூலம்

1973 நவம்பர் 30]

உப தொழில்கள் பிரிவை உருவாக்க சுமார் 300 கோடி ரூபாய் திட்டம் ஒன்றை செயல்படுத்த ஒரு வெளிநாட்டு கம்பெனி, அவர்களே மூலப்பொருட்களையும் கொண்டுவந்து, க்ரூட் காம்பிளக்ஸ் உற்பத்தி செய்ய உறுதியளித்தார்கள். அதை நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்தோம். மத்திய அரசு அதற்கு இன்னும் தயக்கம் காட்டிக்கொண்டிருக்கிறது. தூத்துக்குடியில் இன்டஸ்டிரீஸ் ரீபைனரீஸ் ஒன்றை ஏற்படுத்துவதற்கு திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அதுவும் அங்கேதான் காத்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி நம்முடைய நாட்டுக்குத் தேவையான மிகவும் முக்கியமான தொழில்களுக்கு எல்லாம் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, இப்படிப்பட்ட தொழில்கள் — எந்தெந்தத் தொழில்களுக்கு நாம் மத்திய அரசைக் கேட்டோம்; அவர்கள் தயக்கம் காட்டுவதால் தாமதப்படுகிறது என்று மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்படிப்பட்ட காலதாமதங்களைப் பற்றி நாம் குறிப்புகள், விளம்பரங்கள் மூலம் மத்திய அரசின் நிலையைப்பற்றி விளக்கி வருகிறோம். கூட்டங்களிலும் சொல்லுகிறோம். அதை மக்களும் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆக, இந்தமாதிரியான பிரச்சனைகளில் எல்லாக் கட்சிக்காரர்களும், கட்சி வேறுபாடின்றி ஏகோபித்த குரல் கொடுப்பார்களானால் மத்திய அரசின் தயக்க நிலை மாறும் என்று நம்பலாம்.

திரு. சி. ஆறுமுகம்: நம்முடைய தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கு மத்திய அரசின் அனுமதிக்காக காத்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மைசூர் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை கேட்காமலேயே காவிரியின் குறுக்கே ஹேமாவதியில் அணை கட்டினார்களே அதேமாதிரி நாமும் மத்திய அரசாங்கத்தைக் கேட்காமலேயே நமக்குத் தேவையானத் தொழில்களைத் தொடங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அணை கட்டுவது என்றால் மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே கட்டிவிடலாம். ஆனால் தொழில்களைத் தொடங்குவதற்கு வெளிநாட்டு உதவி, வெளிநாட்டு மூலப்பொருட்கள், வெளிநாட்டுச் செலவாணி தேவைப்படுவதால் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் முடியாது.

திரு. என். கே. பழனிசாமி : சார், 1956-ம் ஆண்டு இண்டஸ்ட்ரீஸ் ரெசல்யூஷனில் இன்னின்ன தொழில்களை மாநில அரசாங்கமே தொடங்கலாம் இன்னின்ன தொழில்களை மத்திய அரசின் அனுமதியோடுதான் தொடங்கலாம் என்றிருக்கிறது. நாம் காத்துக்கொண்டிருக்கக்கூடிய தொழில் விண்ணப்பங்கள் எல்லாம் 1956-ம் ரெசல்யூஷனுக்கு உட்பட்டதா? புறம்பானதா? உட்பட்டது என்றால் தீவிர நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தீர்மானம் ஏட்டிலே இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நாங்கள் குறிப்பிட்டு, அதன் அடிப்படையிலேதான் அவர்களை அனுமதி கேட்டு, அவர்கள் அனுமதி கொடுத்த பின்னால் இப்போது மறுபரிசீலனை செய்கிறார்கள்; தயக்கம் காட்டுகிறார்கள்.

Employment opportunities for Harijans in Private Sector.

* 520 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to take steps for the employment of Harijans in the private sector; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know whether any statistics have been worked out about the percentage of Harijans employed in private sector?

THE HON. THIRU S. MADHAVAN : No, Sir.